செ.வெ.எண்: 753/2016 நாள்: 24.10.2016

# தீ விபத்து இல்லாமல் தீபாவளி கொண்டாடுவதை பற்றிய கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் செய்தி வெளியீடு

மாண்புமிகு உச்சநீதிமன்ற ஆணைப்படியும் , தமிழக அரசின் வழிகாட்டுதலின் படியும் தீ விபத்து இல்லாத தீபாவளி, ஒலி மாசு இல்லாத ஒளித்திருநாளை கொண்டாடிட பொது மக்கள் நலனுக்காக மாவட்ட நிர்வாகம் கீழ்கண்ட அறிவுரைகளை வழங்குகிறது.

- உச்சநீதிமன்ற ஆணைப்படி இரவு 10 மணி முதல் 6 காலை மணி வரை பட்டாசுகளை வெடிக்கக் கூடாது.
- மருத்துவமனைகள், பள்ளிகள், நீதிமன்றங்கள் அமைந்துள்ள அமைதிப் பகுதிகளில் வெடிகளை வெடிக்கக் கூடாது.
- சிறுவர்கள் பட்டாசு வெடிக்கும் போது பெரியவர்கள் மேற்பார்வையில் வெடிக்க வேண்டும். சிறுவர்கள் சட்டைப் பைகளில் வெடியை வைத்துக் கொண்டு வெடிக்க அனுமதிக்கக் கூடாது. காலணிகளை அணிந்து கொண்டு மட்டுமே வெடிக்க அனுமதிக்க வேண்டும். வெடிக்காத வெடிகளை கையில் எடுக்கக் கூடாது.
- திறந்த வெளிகளில் வெடிக்க வேண்டும், பட்டாசு வெடிக்கும் போது அருகில் ஒரு வாளி தண்ணீர் வைத்துக் கொள்ள வேண்டும்.
- வானில் பறந்து வெடிக்கும் ராக்கெட் போன்ற வெடிகளை குறுகிய நெரிசலான பக்கங்களில் வெடிக்கக் கூடாது.
- எரியும் அடுப்பு மற்றும் எரியும் விளக்குகள் பக்கத்தில் பட்டாசுகளை வைக்கக் கூடாது.
- நல்ல தரமான பட்டாசுகளையே உரிமம் பெற்ற கடைகளிலிருந்து வாங்கி வெடிக்க வேண்டும். சீனப்பட்டாசுகளை வெடிக்க வேண்டாம்.
- குடிசைகள் நிறைந்த பகுதியில் பட்டாசு வெடிக்கக் கூடாது. வீட்டின் மாடியில் பட்டாசு வெடிக்கக் கூடாது.
- மேற்கூரை ஓலையால் வேயப்பட்ட பகுதிகளுக்கு உள்ளே உள்ள எளிதில் தீப்பற்றக் கூடிய பொருட்களை அப்புறப்படுத்தப்பட வேண்டும்.
- நீண்ட வத்திகளை கொண்டு பட்டாசு வெடிக்கச் செய்யுங்கள்.
- ஒரு நேரத்தில் ஒரு வெடியை மட்டும் கையாள வேண்டும்.
- வெடிக்கும் போது வாகனங்களை பாதுகாப்பான இருப்பிடத்தில் வைக்க வேண்டும்.
- ரோட்டில் வெடிகளை வெடிக்கக் கூடாது. வெடிகளை பற்ற வைக்கும் போது முகத்தை அதனருகில் கொண்டு செல்லாமல் பாதுகாப்பான இடைவெளியில் நின்று கொண்டு வெடியை பற்ற வைக்க வேண்டும்.
- வெடியை கைகளில் வைத்து கொண்டு பற்ற வைத்து வீசுவது அபாயகரமானது.

- வெடி வெடிக்காத போது அதனை காலால் அணைக்க முயற்சிக்காமல் அதன் மீது தண்ணீரை ஊற்றி செயலிழக்கச் செய்ய வேண்டும்.
- வீட்டிற்குள் வைத்து வெடிக்க கூடாது.
- கம்பி மத்தாப்பு போன்றவற்றை உபயோகித்த பின்னர் நடுரோட்டில் வீசி எரியாமல் அதனை தண்ணீர் உள்ள வாளிக்குள் போட்டு பின் பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்த வேண்டும்.
- வெடிபொருட்களை டப்பா அல்லது வேறு பொருட்களால் மூடி வெடிக்கச் செய்ய கூடாது.
- ஆடையில் தீப்பற்றிக் கொண்டால் உடனே தரையில் படுத்து உருள வேண்டும்.
- தீக்காயம் ஏற்பட்டால் உடனே காயத்தில் குளிர்ந்த நீரை ஊற்ற வேண்டும் மற்றும் உடனடி சிகிச்சைக்கு அருகில் உள்ள மருத்துவமனைக்கு கூட்டிச் செல்ல வேண்டும். தீ விபத்து ஏற்பட்டால் தாமதமின்றி அருகிலுள்ள தீயணைப்பு நிலையத்திற்கு அவசர தொலைபேசி எண் 101 என்ற எண்ணைத் தொடர்பு கொண்டு உடன் தகவல் தெரிவிக்கவும்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.